*சிந்தனை*
*வெள்ளிவிழாச் சிறப்பிதழ் – 1999*

# தண்டனையும் தண்டனைக் கொள்கைகளும்

கந்தசாமி அன்டன்டயஸ்

அறிவியலில் முக்கியத்துவத்துடன் நோக்கப்படுகின்ற நன்மை, தீமை, உண்மை, இன்பம் போன்ற எண்ணக்கருக்கள் போலவே 'தண்டனை' எனும் எண்ணக்கருவும் அறிவியலுக்கு உடன்பாடாயமைந்து, விளக்குவதற்கும், விமர்சிப்பதற்கும் சிரமமானதொன்றாகிறது. தண்டனை அறவியிலிலும், மெய்யியலிலும் ஏனைய பிற சமூக விஞ்ஞானங்களிலும், சமயத் துறைகளிலும் அவ்வவற்றுக்குரிய கற்பிதப் பின்னணிகளோடு பல்வேறு வகைப்பட்ட ஆய்வியல் முறைமைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் வழியால் அலசப்பட்டும் அணுகப்பட்டும் தொடர்வதொன்றாய் உள்ளது.

அறிவியல் சமயம் ஆகிய துறைகளில் தண்டனை பற்றிய நேர்க்கணிய நோக்குகள், அணுகுமுறைகள் விருப்புடன் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. குற்றம் என்பது இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட உலகவமைப்புக்கு எதிராக எழுகின்ற எதிர் நடவடிக்கைகளாகும் எனச் சமய நூல்கள் கருதுகின்றன.[1] மநு மநுஸ்மிருதியில் தண்டனை பற்றிக் குறிப்பிடுகையில் குற்றவாளிக்குரிய தண்டனைகள் இந்த உலகில் மட்டுமல்ல அவன் ஏகவிருக்கும் அடுத்த உலகத்திலும் குற்றத்திற்கான தண்டனையைப் பெறுகின்ற நிலைப்பாட்டிற்குரியன என்றும், மேலும் செய்த குற்றங்களின் விளைவுகளால் மறுபிறப்பினையெடுத்து, அதன் வழியாகவும் தனக்குரிய தண்டனையைப் பெறுவான் எனவும் கூறுகின்றார்.[2] முகமதியர்களின் பிரகாரம் அவர்கள் சமயக் கருவூலமாகக் கொள்கின்ற குர்ஆன் ஒரு சமயக் கருவூலமாகவும் அதேவேளை தண்டனைகளை உள்ளடக்கிய சட்ட நூலாகவும் கருதப்படுகின்றது. தண்டனையை சமய வழிகளிலிருந்து நோக்குகின்ற போது சில நடைமுறைகளையும், தொடர்புகளையும் நோக்க வேண்டியுள்ளது. வெகுமதி அல்லது பாராட்டுதல் என்பதனையும், தண்டனை என்பதனையும் சமயங்கள் பிரித்து வெவ்வேறாக, முன்னயது இவ்வுலகிற்கும், பின்னயது மறுஉலகிற்கும் என்றவாறாக வகையீடு செய்கின்றன. பாராட்டுதல் என்பது ஒழுக்க மேம்பாட்டையும் தண்டனைக்குட்படுதல் என்பது தீயநடத்தையையும் குறிப்பது எனக் கருதுகின்றன. எனவே தடுதண்டனை முறையொன்றே இவ்வுலகிற்கு உகந்ததொன்றாகக் கொள்ளப்படுகின்றது. இக் கருத்துக்கள் குற்றவியல் தண்டனை முறைமைகள் குறித்து

வித்தியாசமான மனப்பாங்கினைத் தோற்று விக்கின்றன. உலகில் பெரும் நோவுகள் உணர்வு பூர்வமானவையாயினும் அவை கடந்து செல்லும் கெட்டவைகளே. பொது நோக்கில் குற்றங்கள் இறைவனுக்கு எதிராக இழைக்கப்படுபவை எனக் கருதப்பட்டாலும் கூட அதற்குரிய தண்டனையை இறைவனே வழங்குவார் என்ற நம்பிக்கையும், ஆதங்கத்தையும் அவை அடித்தளமாகக் கொண்டனவாகவே காணப்படுகின்றன. தனிமனிதனோ அல்லது மனித அமைப்புக்களோ குற்றங்களுக்கான தண்டனைகளை நிச்சயிப்பதை, நிறைவேற்றுவதை அதிகமான சமயங்கள் விரும்புவதில்லை. திருச்சபைகளைச் சார்ந்தோர் குற்றங்களுக்காக அதனை இழைத்தோருக்கு வழங்கக் கூடியதெல்லாம் பாவ மன்னிப்பே என்கின்றனர். குற்றக் குறைப்புக்கும் குற்றவாளியைத் திருத்துவதற்கும் அன்பு வழியை, அஹிம்சை வழியை உலகில் பெரும்பாலான சமயங்களும், அறநூல்களும் முன்மொழிந்து நிற்கின்றன. அறநூல்களுள் குறிப்பாகத் திருக்குறள், குற்றம் புரிந்தவனுக்கு குற்றத்தின் கொடுமையை அன்பின் வழியதாய், அவன் நாணும்படியாக உணர்த்துகிற முறைமையிலேயே ஒறுத்து - தண்டித்து அவன் திருந்துவதற்கு வழிகாட்ட வேண்டும் என்கிறது. 3.

தண்டனை முறைமைகள் மிக அநாதி காலம் தொட்டே மனித சமூக வழக்கிலிருந்து வருகின்றதொன்றாகும். பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண், மரணத்துக்கு மரணம் என்றவாறாக பழிக்குப் பழி அடிப்படையிலேயே தண்டனைகள் வழங்கப்படும் வழக்கு ஆதிநிலைச் சமுதாயத்தில் இருந்தது. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில், 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இத்தகைய மரண தண்டனையை உள்ளிட்ட தண்டனை முறைகளுக்கெதிராகக் குரல் கொடுக்கப் பட்டது. பெக்கோனோ, வோல்ரேலிவ், டிட்சரேல், ரூசோ போன்ற புத்திஜீவிகள் தண்டனை முறைகள் பற்றி, அறிவுசார் சட்டவரைவொன்றை ஏற்படுத்த வேண்டும் என அபிப்பிராயப்பட்டனர். பக்கோரியாவின் குற்றமும் தண்டனையும் என்ற நூலில் உருசிய மன்னன் கதாரின் மரணதண்டனையை இராசதுரோகம் தவிர்ந்த ஏனையவற்றுக்கு வழங்கக் கூடாது என நிபந்தனையிட்டு 1750ல் மரணதண்டனையைத் தனது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் நீக்கினார்[4] எனக் குறிப்பிடப்படுகிறது. இவனது பிரகடனம் மேற்குலகில் விரைவாகச் செல்வாக்குப் பெற்று செயல் மாற்றங்களை உண்டு பண்ணியது.

எழுதப்பட்ட, எழுதப்படாத மரபுவழி வந்த விதிகளை, ஒழுங்குகளை, சமூக நியமங்களை மீறுகின்ற போது வழங்கப் படுகின்றதொன்றே தண்டனையாகும். பெற்றோருக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகள், ஆசிரியருக்குக் கீழ்ப்படியாத மாணவர்கள், நாட்டுச் சட்டத்திற்குக் கீழ்ப்படியாத மக்கள் அவற்றின் விளைவாகப் பெறுவது தண்டனையினையேயாகும். தண்டனையினைப் பெறுவதால் கிடைக்கின்ற 'வலியானது' குத்துச் சண்டை வீரர் ஒருவர் தனது சகபாடிக்குக் குத்துகின்ற போது ஏற்படுகின்ற வலியினைப் போன்றதொன்றல்ல. அல்லது பல் வைத்தியர் பல்லைப் பிடுங்குகின்ற போது ஏற்படுகின்ற வலியினைப் போன்றதுமல்ல. இது வேறானது. இந்த வலிகள் உடலில் ஒரே வித தாக்கத்தை ஏற்படுத்துமாயினும் உள்ளத்தில் அதாவது உணர்வில் வேறுவேறான தாக்கத்தினையே ஏற்படுத்தும்.

இயல்பில் தண்டனை மகிழ்வற்ற தொன்றே யாயினும் அது குற்றம் செய்தவனுக்கு, செய்த குற்றத்தின் பிரகாரம் வழங்கப் படுகின்றதொன்றாகும். இயற்கையின் ஒறுப்புக்களால் வருகின்ற அழிவுகள், பஞ்சம் போன்றவை தண்டனைகளல்ல. ஆட்சியிலிருக்கும் அரச அமைப்புக்கள், நிருவாக வலுவினையும், சட்ட வலுவினையும் கொண்ட சமூக அமைப்புக்கள், குற்றவியல் சட்ட வரைவுகளின் வழிகாட்டலில், நீதிமன்ற விளக்கங்கள் சட்ட அலசல்கள் சான்றுகள், சாட்சியங்கள், சரிபார்ப்புக்கள் என்ற நீண்ட வழிமுறைகளின் பின் நீதிவான் அல்லது நீதிவான் சபை,

குற்றத்தின் பெயரால் குற்றவாளிக்கு வழங்குகின்றதொன்றே தண்டனையாகும். ஹான்ஸ்வொன் ஹென்ரிக் என்போர் தண்டனை என்பதனை ஒருவிதமான சேர்க்கைத் தனமான அபாயத்தைத் தோற்றுவிக்கிற தொன்று என்றும், ஒழுங்குபடுத்தப்பட்டதொரு துன்பப்படுத்துதல் என்றும் ஒழுங்குபடுத்தப் பட்ட சட்டத்தின் வழியாய் மனித வாழ்க்கை யினை பலவீனப்படுத்துகிறதொன்றென்றும் குறிப்பிடுகின்றார். மேலும் தண்டனை வழியால் மனிதனை உணர்வு பூர்வமாக மனிதாயத்தைப் பேணச் செய்வதுடன், துன்பம் தருவதும், ஆத்திரமூட்டுவதும், நோவைத் தருவதுமான செயல்களிலிருந்து விலக்கிக் கொள்ள, தவிர்த்துக்கொள்ள பயிற்சியளிக்கும் ஒன்றாகும் என்றார்.[5] எனினும் தண்டனை யென்பது நடைமுறையில் தாமதமானதும், சிக்கல் நிறைந்ததுமானதொரு செயல்முறை யாக அமைந்தள்ளது. குற்றத்தைக் கண்டு கொள்ளுதல், குற்றவாளியை இனங்காணுதல், தேடிப்பிடித்தல், நீதிமன்றத்தில் நிறுத்துதல், தண்டித்தல் என்ற செயல்முறைகளில் பல தடங்கல்களும், தாமதங்களும் அத்துடன் தப்பியோடுதலுக்கான வாய்ப்புகளும் இருக்கவே செய்கின்றன.

'பயன்பாடு' என்கிற அர்த்தத்தில் தண்டனையென்பது விரும்பத்தகாதது, எதிர்கணியப் பயன்களைக் கொண்டது எனக் கருதப்படினும் சமுதாய நிலைபேற்றிற்கும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி சமூகத்தில் ஒழுக்க வாழ்வை உறுதிப்படுத்துவதற்கும் தண்டனை முறைகள் அவசியமானவையே. ஜெரமி பெந்தாம் தண்டனை பற்றிக் குறிப்பிடுகையில் எல்லாத் தண்டனைகளும் தவறாக வழிநடத்துபவை என்றார். பிறிதொரு சந்தர்ப்பத்தில் எல்லாத் தண்டனைகளும் அவற்றின் மட்டத்தில் அவைகள் பிசாசு போன்றவையே என்றார். இருப்பினும் பயன்வழிக் கொள்கையினர் மகிழ்வு வகையின தாக இருப்பினும் சரி, இலட்சிய வகையினதாக இருப்பினம் சரி, அது தண்டனையை நியாயப்படுத்துவதொன்றானால் அந்த நியாயப்படுத்தல், தண்டனை ஏற்படுத்துகின்ற விளைவுகளின் அடிப்படையில் அமைய வேண்டும் எனப் பொதுவாக ஏற்கின்றனர். தண்டனைக்குட்படுபவர் அடையும் வேதனை யானது முழுமையாக வெறுக்கத்தக்கதொன் றென்றே கருதப்படுகின்றது. இத்தகைய வெறுக்கத்தக்கதொன்றே உலகில் ஏற்படுத்து வது நியாயப்படுத்தப்பட வேண்டியதாகும். இதன் விளைவுகள் அவர் தண்டிக்கப் பெறாமையால் வரும் விளைவுகளைக் காட்டிலும் மேலானதாகும். ஏனெனில் அவன் வேதனையை இது ஈடுசெய்கிறது. இதனால் சுட்டப்படும் விளைவுகள் தடுப்பையும், சீர்திருத்தத்தையும் கொண்டவையாகும்.[6] சம காலத்தில் பயன்வழி வாதத்தினை முன்னெடுப்பவர்களுள் ஒருவரான ஜீ. ஈ. மோர் என்போரின் கருத்தானது பாரம்பரிய பயன்வழி வாதிகளிலிருந்து வேறுபடுகின்றது. மோர் தண்டனைக்குப் பிறகான பின் விளைவுகளின் அடிப்படையில் மாத்திரம் தண்டனை நியாயப்படுத்தப்பட வேண்டிய தொன்றல்ல என்கிறார். மேலும் குற்றம் என்பது கூடாதது. ஆனால் நோவு என்பது வேறானது. இரண்டும் ஒருவனில் இணைவது கெட்டதாயினும், இக்கெட்டதானது குற்றத்திற்காக தண்டனை வழங்காமல் விடுவதிலும் பார்க்க குறைந்த கெட்டது என்கிறார். நன்மை பயக்கும் எனினும் தண்டிக்காமல் விடுவதே கெட்டது என்கிறார்.[7]

தண்டனை பற்றிய பலதரப்பட்ட அறிஞர்களது கருத்துக்களை நோக்குகையில் உடன்பாட்டை வலுப்படுத்துவதை நீக்கி வெறுப்பூட்டும் தூண்டலை ஏற்படுத்துவதே தண்டனை என்கிறார் ஸ்கின்னர். புற அதிர்ச்சிகள் மனப்புண்ணை ஏற்படுத்தும் என்கிறார் சிக்மண்ட் புறொய்ட். இத்தகைய கருத்துக்கள் தண்டனை என்பது ஒரு 'சமூகத் தீங்கு' எனவும், தவறுக்காகத் தண்டனை வழங்குவதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் கிடைக்காமல் பதிலாக வெறுப்பு நிலைகளும், நிரந்தர மன ஊனங்களும் உருவாகும் வாய்ப்புகளுக்கு வழி செய்வது

போல அமைகிறது எனவும் எண்ண வைக்கின்றன

கிரேட் எனும் அறிஞர் தண்டனை பற்றிக் கூறுகையில் ஒருவரை இடருக்குள்ளாக்கி அவரது நடத்தையில் குறிப்பிட்ட மாற்றத்தை ஏற்படுத்த முயல்வதே தண்டனை என்கிறார். அரிஸ்டோட்டிலின் கருத்துப் பிரகாரம் தண்டனைகள் பழைய தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காக எனும் தேவைப் பாட்டினையுடையதாக இருக்க வேண்டும் என்கிறார். பிராட்லியின் கருத்துப்படி தண்டனை பெற்றவன் தன்னளவில் தானாகவே தண்டனைக்குரியதைத் திருப்பி செலுத்தி விட்டேன் என்று சொல்லும் வகையில் அமையும் போதுதான் தண்டனை தண்டனையாகிறது. குற்றம் புரிந்தவனுக்கு தண்டனையானது அவனது தவற்றினை உணர்வு பூர்வமாக உணர்த்தக்கூடியதொன்றாக அமைந்து, தண்டனையின் பேறாய் நான் தவறை உணர்ந்து விட்டேன் எனும் உறுதிப் பாட்டினை உலகிற்கு அவன் வெளிக்காட்டுகின்ற போதுதான் தண்டனை முறைகள் தமது இலக்குகளை அடைந்து விட்டன எனப் பெருமிதப்படலாம். இக்கருத்தையே மேற்குறிப்பிட்ட அறிஞர்களது கருத்துக்கள் வலியுறுத்துகின்றன. தண்டனையின் பின்னாய விளைவுகளுக்கே இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.

ஜே. டி. மாப்பொட் தண்டனையை சட்ட சம்பந்தமொன்றாகக் கருதியே தண்டனையின் அவசியத்தை வற்புறுத்துகின்றார். குற்றவாளி என்பவன் சட்டத்தை மீறியவன். அவன் நல்லவனாகக் கூட இருக்கலாம். ஆயினும் அவன் தண்டிக்கப்பட வேண்டியவன் என்கிறார். மாப்பொட் தடு தண்டனைக் கொள்கையினையோ, சீர்திருத்தத் தண்டனைக் கொள்கையினையோ ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். இவர் வரவேற்பதெல்லாம் துன்பத்துக்கு துன்பம் தரும் அதாவது பழிக்குப் பழி வாங்கும் கொள்கையினையே யாகும். பழிக்குப் பழி வாங்குதல் எனும் கொள்கையே குற்றவாளியைத் திருத்தும் என்றும் ஏனைய இரண்டும் குற்றவாளி திருந்துவதற்கான வாய்ப்பினை அளிக்காது என்றும் கூறுகிறார். குற்றத்திற்குச் சமமான அளவில் தண்டனை வழங்கும் கொள்கை வெறுமனே பழிக்குப் பழி என்கிறவாறாக இல்லை. ஆனால் உண்மையில் இங்கேதான் சட்டம் நிலைநாட்டப்படுகிறது என்கிறார். 8. சட்ட நிலைநாட்டலுக்கும், சமூக நலன் பேணலுக்கும் மிகக் கடுமையான தண்டனை முறைமையே அவசியமானதென வற்புறுத்தப் படுகின்றது.

கார்ள் மெனிஞ்சர் (Karl Menninger) எனும் உள மருத்துவர் தண்டனை என்பது அதனடிப்படையில் ஒரு குற்றமே, அக்குற்றமானது சமூகத்திற்கெதிராக விளைவிக்கப்படுகின்ற குற்றமாகும் என்கிறார். பாரம்பரிய தண்டனை முறைகள் சமுதாயத்திற்குச் செய்த நன்மையிலும் பார்க்க தீமையே பன்மடங்கானது. அவை உண்மையில் மீண்டும் மீண்டும் குற்றம் செய் எனத் தூண்டுகிற முச்சுக்களே யாகும். சமூகத்தில் பெரும்பாலானோரைக் கெட்டவர்களாக மாற்றுவதற்கே இத்தண்டனை முறை உதவும். சட்டவாக்க, சட்ட அமுலாக்கல் திணைக்களங்கள் உள மருத்துவப் பகுதிக்கு மாற்றப்பட வேண்டும். இங்கு குற்றவாளிகளை மனோவியல் அடிப்படையில் திருத்தி அவர்களை சமூகத்திற்குரியவர்களாக உத்தரவாதப்படுத்தி அனுப்ப முடியும் என்றார்.[9] தண்டனை முறைகளை மட்டுமல்ல தண்டனைகளை வழங்கு அடிப்படையாக இருக்கின்ற அமைப்புக்களையும் இவர் சாடுகின்றார்.

தண்டனையின் தேவைப்பாடு, தேவைப் பாடின்மை பற்றியும், வரையறைகள் பற்றியும் பயன்படும் விதம் பற்றியும் மெய்யியலாளர்களிடமும், சமூக, ஒழுக்க உளமருத்துவவியலாளர்களிடமும் வெவ்வேறுபட்ட கருத்து நிலைகள் காணப்படினும் தனிமனிதன், சமூகம் எனும் அமைப்பினுள் வருகின்ற போது சமூக ஒழுங்குகளைப் பேணவும், சமூகத்தில் தனக்கென இணைவுகளை வகுத்துக் கொள்ளவும், வரையறுக்கவும், சமூகத்தில் தனக்கான

சுதந்திரத்தைப் புரிந்து கொள்ளவும், ஆரோக்கியமானதொரு எதிர்கால வாழ்வை உறுதிப்படுத்திக் கொள்ளவும் தண்டனை முறைமைகள் இன்றியமையதவையாகின்றன.

ஒழுக்கவியலாளர்கள் அறவாழ்வைப் பாதிக்காத வகையிலும், மெய்யியலாளர்கள் தண்டனை முறைமைகள் தனிமனித சுயாதீனத்தினை தெரிவுச் சுதந்திரத்தினை பாதிக்காத வகையிலும் அதற்கான வரையறைகளை வகுக்கும் வகையிலும், சமூகவியலாளர்கள், சமூக நலனைப் பேணுகின்ற வகையிலும், உளமருத்துவவியலாளர்கள் குற்றவாளிகளின் மனநிலையைப் பாதிக்காத வகையிலும் தண்டனை பற்றிய கொள்கைகளை உருவாக்கி வரையறுக்க முற்பட்டனர். முன்னோக்கிப் பார்த்தல் (Foward looking) பின்னோக்கிப் பார்த்தல் (Backward looking) என்கின்ற முறைமைகளைப் பின்பற்று வதன் வழியாக எதிர்கால நல்லடைவுகளை அடைந்து விடலாம். என்கிற நம்பிக்கையுனர்வோடு தண்டனை முறைமைகளை நியாயப்படுத்தி முன்வைக்கிறார்கள். பிளேட்டோ முன்னோக்கிப் பார்க்கின்ற முறையையும் பெந்தாம் போன்றவர்கள் பின்னோக்கிப் பார்க்கின்ற முறைமைகளையும் வழிக்கொண்டனர்.[10] தண்டனை பற்றி மூன்று கொள்கைகள் வரலாற்று ரீதியாகக் காணப்படுகின்றன. முறையே துன்பத்துக்குத் துன்பம் தரும் தண்டனைக் கொள்கை அல்லது பழிக்குப் பழிவாங்கும் கொள்கை (Retributive theory) எச்சரிக்கைத் தண்டனைக் கொள்கை அல்லது தடுதண்டனைக் கொள்கை (Deterence theory) சீர்திருத்தத் தண்டனைக் கொள்கை (Reformative theory) என்பனவே அவையாகும்.

பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கையை துன்பத்திற்குத் துன்பம் தரும் கொள்கையெனவும் அழைப்பர். இத்தண்டனை முறைமை மிகப்பழமை வாய்ந்தது. புராதன மக்களிடம் இந்தத் தண்டனை முறைமை மட்டுமே காணப்பட்டது. விலங்குகளிலும் 'பழிக்குப் பழி' என்கின்ற பழக்கம் வழக்கிலிருந்து வருகின்றது. ஆயினும் விலங்குகள் உணவு, வாழ்விடப் பாதுகாப்பு, இனப் பெருக்கம் என்கிற வாழ்வியல் தேவைகளின், அடிப்படை ஊக்கிகளின் உந்துதல்களால் ஏற்படுகின்ற தேட்ட நிலைகளுக்கு ஊறு வருகின்ற போதே இந்தப் பழிக்குபழி உணர்வினை வெளிக்காட்டுகின்றன. இதனைத் தற்காப்பு நடவடிக்கைப் பொருட்டெனவே உளவியலாளர் கருதுவர். பழிக்குப் பழியுணர்வு மிருகங்களிடம் கொலை வரையில் நீண்டு செல்வதென்பது அரிதிலும் அரிதே. ஆனால் மனித மனமோ அன்று மட்டுமல்லாமல் இன்று வரைக்கும் பழிக்குப் பழி உணர்வு மேலோங்கலால் துடித்துக்கொண்டேயிருக்கின்றது. மனிதன் சமூகமாக இணைந்து தற்பாதுகாப்புக்காகவும், இருப்பினை உறுதி செய்யவுமாய், பல குற்றவியல் சட்டங்களையும் அவை செயற்பட்டு தகுந்த தீர்ப்பை அளிக்க பல நிறுவனங்களையும் அமைத்துக் கொண்டுள்ள போதும் அதன் தீர்ப்பு வரை காத்திராது, தாமாகவே கருமம் ஆற்றவும் பல சந்தர்ப்பங்களில் தலைப்பட்டு விடுகின்றான்.

Retribution எனும் சொல் இலத்தீன் சொல்லான Retribuere என்கிற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது. திருப்பிக் கொடு (to pay back) என்பதே இதன் பொருளாகும். இக்கொள்கையின் நடுவன் கருத்தாக அமைவது, தண்டனை என்பது ஒரு வகையான உணர்வில் குற்றத்திற்காக வழங்கப்படுகின்ற கொடுப்பனவாகும் என்பதாகும். இந்த திருப்பிக் கொடுத்தல் என்பது புராதன பழிவாங்கல் என்கிற கொள்கையினை ஒத்ததொன்றே. எடுத்துக்காட்டாக A, B, யை அடித்தான். அப்போது நான் இதற்காக தரவேண்டியதை உனக்குத் தர செய்கிறேன் என B கூறுகிறான். கண்ணுக்குக் கண், கையிற்குக் கை எனும் முறைமை இங்கு பயன்படுத்தப்படுகிறது. இதனை அதற்குரிய விலையினைக் கொடுத்தல் (Paid the price) என்றவாறாகக் கருதலாம்.

ஜே. டி. மாப்பொட் இக்கொள்கையின் தேவையினை வலியுறுத்திக் கொண்டு இத் தண்டனையை வெறுமனவே சட்டம் சார்ந்த தொன்றாக கருதி வரவேற்றார்.[11] சமூகவியல் பேராசிரியரும், உள நரம்பு வைத்தியருமான பேராசிரியர் ஏர்ணஸ்ட் வான் டென் ஹாக் மரண தண்டனையைப் பேண வேண்டும் என்று வற்புறுத்தி இக்கொள்கைக்கு உயிர் ஊட்டுகிறார். சக மனிதர்களை கொலை செய்தல், ஒற்றர் வேலை செய்தல், பயங்கர வாதச் செயலில் ஈடுபடுதல் தீவிரமான குற்றங்களைத் தடுப்பதற்காக மரண தண்டனையின் பிரயோகம் அவசியம் என்கிறார். மேலும் இத்தண்டனைக்கு அடிப்படைத் தேவைகள் இரண்டு உண்டென்றும் அவை முறையே நீதியை நிலைநாட்டுதலும், குற்றங்களைக் குறைத்துச் சமூக இலாபங்களை கூட்டுவதுமாகும் என்றும் கூறுகிறார்.[12] இவரது தண்டனை பற்றிய பிற்காலக் கருத்துக்கள் பெரிதும் மாற்றம் கண்டதாகவே காணப்படுகின்றன.

இந்தியப் பாரம்பரியத்தில் மநுவின் மநுஸ்மிருதி குற்றத்திற்குத் தண்டனை வழங்க வேண்டியதன் தேவையை வற்புறுத்தி, வகைப்படுத்தி வழங்குவதோடு மரண தண்டனையையும் ஏற்புடையதொன்றாக ஏற்றுக்கொள்கிறது. ஆயினும் மநுவின் தண்டனை முறைகளில் மானிடத்திற்குப் பொதுமையான தண்டனை எனும் அம்சம் கடைப்பிடிக்கப்படவில்லை. சாமான்யன், அரசன், அந்தணன் என மனித இனம் வகுக்கப்பட்டு அவ்வவ் வகுப்பினர்க்கு என்ற வாறு தண்டனை வகுக்கப்பட்டு வழங்கப் படுகிறது.[13] தண்டனையின் வலுவும், வன்மையும் சமூகத்தில் மனிதனின் நிலையை யொட்டியே அமைகின்றது. தன்னாண்மை காப்பாற்றுவதற்காகவும், எக்காலத்திலும் தீட்சை பெற்றவனைக் காப்பாற்றவும், தன் பொருளைப் பறித்துக்கொண்டு போகிற சமயத்திலும் நியாயமாய் தரும யுத்தம் செய்து ஒருவனைக் கொன்றவனுக்கு அதர்மம் நேரிடாது.[14] என்கிறது மநுதர்ம சாஸ்திரம். பிறிதோர் இடத்தில் அரசன் வன்செயலா ளனை தண்டிக்க வேண்டும் திட்டுகிறவன், திருடுகிறவன், அடிக்கிறவனை விடவும் வன்செயலாளன் அதிபாவி, வன்செயல்காரன் தருமத்தை அழிப்பவன், இவனை அரசன் சுட்டாயம் தண்டித்தேயாக வேண்டும் என்கிறது.

துன்பத்திற்குத் துன்பம் தருகின்ற தண்டனை முறைமையானது அறவழிக்கு அறவே பொருந்தாத கொள்கையாகும். நீதியின் இயல்பு குறித்து இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. தவறுக்குப் பொருந்தும் படியாக தண்டனை கொடுப்பதே நீதிக்குரிய இயல்பான பண்பென்றும் (Natural sense of Justice) தீமையை வேருடன் களைய வேண்டும் என்கிற அடிப்படையிலே தண்டனை கொடுப்பதே நீதிக்குரிய இயல்பென்றும் கருதப்படுகின்றது. எனவே தவறுக்குப் பொருந்தும்படியாக என்கிற நீதியின் நிலைப்பாட்டின் நோக்குகையில் அது ஓரளவிற்கு வரவேற்கத்தக்கதொன்றாக அமைகின்றது. அதேநேரம் வேரோடு குற்றத் தைக் களைதல் என்பது சிக்கலானதொன்றா கவே விளங்குகின்றது. இந்த வேருடன் களைதல் என்கிற நிலைப்பாடு பழிக்குப் பழி என்கிற கொள்கையுடன் ஒத்துப்போவதாகவே தெரிகின்றது. பாரிய குற்றம் செய்தவரை அழித்தல் என்பதையே, வேருடன் களைதல் என்பது சுட்டி நிற்கிறது எனலாம்.

தண்டனை குற்றம் புரிந்தவர்களைத் திருத்துவதற்காகவும் மேலும் குற்றம் செய்யாமல் தடுப்பதற்காகவும் அதேவேளை ஏனைய மாந்தர்களுக்கு குற்றமிழைத்தவன் பெறும் துன்பத்தை எடுத்துக்காட்டாக்கி ஏனையோர் இத்தகைய குற்றச் செயல்களை எதிர் காலத்தில் செய்யாமல் இருப்பதற்கு தண்டனை வழங்கல் உந்துசக்தியாக படிப்பினையாக அமையும் எனும் கருத்து பழிக்குப்பழி என்கிற கொள்கையினால் அடிப்பட்டுப்போய் விடுகிறது. பழிக்குப்பழி என்கிற கொள்கையின் மூலாதாரமான மரண தண்டனை மனிதன் திருந்துவதற்கு வழிசெய்

யாமல் அவனையே மாய்த்துவிடுகின்றது. மரணம் மனிதனது மனித இனத்தோடான தொடர்பினை அறுத்துவிடுகின்றது. றஸ்ரிடால் (Rustidall) துன்பத்திற்குத்துன்பம் என்கின்ற இக்கொள்கையை பழிக்குப்பழி என்கிற கொள்கையென்றும் ஓர் ஈவிரக்கமற்ற நடவடிக்கையென்றும் கெட்டதற்கு மேலும் கெட்டதைச் சேர்ப்பதென்றும் குறிப்பிடுகின்றார்.

பழிக்குப்பழி என்பதன் வழியாக, நீதியின் பெயரால் ஒருவித 'சமன்செய்கிற' (குற்றத்திற்கு தண்டனையை சமப்படுத்தல்) நிலையினை உருவாக்கி சமூக அமைதியைக் காத்துக்கொள்ளலாம். என்கிற கருத்து அநாதி காலம் தொடக்கம் இருந்து வருகின்றது. மன்னன் தனது மகனை தேர்க்காலில் நெரித்துக் கொன்று பசுவின் துயர் தீர்த்த கதை மநுநீதி கண்ட சோழனின் வரலாற்றில் ஒரு நிகழ்வாகக் குறிப்பிடப்படுகின்றது. தண்டனைகள் தண்டனைமுறைகள் வெறுமனே சட்ட ஒழுங்குகளை மட்டும் கொண்டிருக்காமல் புராண நம்பிக்கைகளையும் அநாதிகாலம் தொட்டே கொண்டிருக்கும் நியதி காணப்படுகிறது.[15] சமகாலத்தில் கூட இதே 'சமன்செய்கிற' தண்டனைமுறைகள் காணப்படுகின்றன. மரணதண்டனை இன்னும்பல ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படுகின்றன. மரணம் விளைவித்தவனுக்கு மரண தண்டனையே எனக் குற்றவியல் சட்டங்கள் குறிப்பிடுகின்றன. இந்த அளவுகோலைக் கொண்டே நீதிவான்கள் வேறுபட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளில் நிகழ்ந்த நிகழ்வுகளை ஆராய்கிறார்கள். குற்றம் என்கிறபோது அது சமுதாய சமநிலைக்குக் கேடுவிளைவிக்கின்றன என்கிற முற்கோட்பாட்டுடனேயே விசாரணைகள் ஆரம்பமாகின்றன. மறுபுறத்தில் சமநிலை பேணுவதே நீதியின் பணி என்கிற விழுமியத்தை இரு கருத்துக்கிடமின்றி நீதிவான்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். குற்றத்திற்குத் தண்டனையை வழங்குவதன் வழியாக எவ்வாறு சமநிலையைப் பேணமுடியும்? ஏற்கனவே ஒருவர் இழைத்த குற்றத்தினால் இன்னொருவரில் இழப்பு நிலையானதொன்றாகி துன்பமும் இழப்பும் இருப்பில் இருந்து கொண்டிருக்கிற போது (இழந்தவை இழக்கப் பட்டவையாக) அவற்றை எந்தவொரு நடவடிக்கையினை எடுப்பதன் வழியாகவும் ஈடுசெய்ய முடியாது. இங்கு 'சமப்படுத்துதல்' என்கிற உணர்வு வார்த்தைகளில் மட்டுமே வடிவம் பெற்றிருக்கும் உணர்வு மாற்றங்களை ஏற்படுத்தாது.

துன்பத்திற்குத் துன்பம் என்கிற அடிப்படையிலான தண்டனையை வழங்குவதன் வாயிலாக குற்றத்திற்குரிய நிகழ்வொன்றின் சுவடுகளே இல்லாதவாறு துடைத்து விடலாம் எனும் கருத்து முன்வைக்கப்படுகிறது. கரும்பலகையில் எழுதப்பட்டவற்றை துப்புரவாக அழித்துவிடல் மூலம் சுவடுகள் மறைந்துவிடல் போன்றே குற்றத்திற்குத் தண்டனை வழங்குவதன் மூலம் தண்டனைக்கு அடிப்படையாகவிருந்த நிகழ்வு அடியோடு மறக்கப்பட்டு விடும் என நம்பப் படுகின்றது. இக்கருத்துக் குறித்து கெசல் குறிப்பிடுகையில் மொழி சம்பந்தமான விடயங்களில் தேவையாயின் இவை நிறைவுத் தன்மையுடையனவாக அமையலாம். ஆனால் உணர்வு குறித்த விடயங்களில் இவை உரிய பலனைக் கொடுக்குமா? என ஐயப்பட வேண்டியுளது என்கிறார்.

பழிக்குப் பழி வாங்குதல் கொள்கையினால் ஏற்படுகின்ற கடின நிலைகளைத் தவிர்க்கும் நோக்குடனும், காலம் காலமாக மத நிறுவனங்கள் தண்டனையின் கோர நிலை பற்றி ஏகோபித்த குரலில் காட்டிய ஆட்சேபங்களைக் கருத்தில் கொண்டும் அறவியலுக்கு ஓரளவிலாயினும் உடன்படத் தக்க வகையிலும் தண்டனை பயனுடையதாக அமைய வேண்டும் என்கிற பயன்வழி வாதிகளின் தொடர் வற்புறுத்தலுக்கு, இசையத்தக்க முறையிலும் முன்வைக்கப்பட்ட கொள்கையே தடுதண்டனைக் கொள்கையாகும். பிரித்தானியர்கள், ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் தண்டனை முறைமைகள் பற்றிய மீளாய்வின் அவசியத்தை தீவிரமாக வற்புறுத்தினர்.[16] வான்டன் ஹாக் போன்ற அறிஞர்கள்

மரணதண்டனை பிரயோசனமற்றது. ஏனெனில் அது மற்றையோர் குற்றம் புரிவதிலிருந்து தவிர்க்க உதவாது என்றார்.[17] குற்றவாளிக்கு வழங்கப்படுமொன்று என்பதோடு அது ஏனையோரையும் குற்றம் செய்யாதவாறு தடுக்கக்கூடிய அம்சத்தையும் உள்ளடக்க வேண்டும் என்ற கருத்து இத்தண்டனை முறையில் மேலோங்குகிறது. குற்றவாளியை மேலும் குற்றம் புரியாது தடுத்தலை மட்டும் நோக்கமாக இக்கொள்கை கொண்டிராது ஏனையோரும் குற்றம் செய்யாமல் தடுக்க இக்கொள்கையின் பிரயோகம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இங்கு 'தடுப்பதும்', 'எச்சரிப்பதுமான' இருவித எதிர்பார்ப்புக்கள் ஒரு தண்டனை நிகழ்வில் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆதலால் இங்கு குற்றவாளிக்கு செய்த குற்றத்திற்காகவும் அதே வேளை மற்றையோருக்கு 'மாதிரி'யாகவும் அமைகின்ற வகையிலும் தண்டனை வழங்கப்படுகிறது எனலாம். மற்றையோருக்கு மாதிரியாக ஒருவனைப் பயன்படுத்துவது 'கருவி நலன்' என்கிற பாவனை வழிப்படலை நீதிக்கு உவப்பாக சான்றோர் கருதார். மனிதன் கருவியாதல் என்கிற நிலையினை அடைதலை அறவியலாளரும், மனித உரிமைச் சாசன வரைவாளர்களும் ஏற்கார். குற்றவாளிக்குத் தண்டனை குற்றத்திற்காகவும், மாதிரிக்காகவும் எனப் பரிமாணம் பெறுகின் போது, தண்டனையின் கனதி அல்லது கடுந்தன்மை கூடுதலாக அமைய நிறைய வாய்ப்புக்கள் உண்டு. மாதிரியாக என்கிற போது தண்டனை முறை நாளடைவில் குற்றமற்றவனையும் தண்டித்து சமூகத்திற்கு மாதிரி காட்ட முற்படலாம். தண்டனைக்கு இருவித பயன்பாடுகள் உண்டென்கிற போது மேற்குறிப்பிட்டது போன்று நடைபெறுதல் இயல்பே. எச்சரிக்கையாகவும் தண்டனை இருக்க வேண்டும் என்கிற நிலைப்பாடு பேணப்படுகின்ற போது அப்பாவிகள் தண்டிக்கப்படும் நிலை ஏற்படலாம். சில சந்தர்ப்பங்களில் குழப்பம் விளைவிக்கும் வகுப்பை நடாத்த விடாது குழறுபடி செய்கிற மாணவனை ஆசிரியர் கண்டபோதும் அவனைத் தண்டித்தால் பின் விளைவுகள் தனக்குப் பாதகமாகும் எனக் கருதி, அவனைத் தண்டியாது எச்சரிக்கைப் பொருட்டாய் வேறொரு மாணவனை தண்டிக்கிற வரலாறும் நிறையவே உண்டு. இவ்வாறான நிகழ்வுகள் தடுதண்டனை அகன்றதாக நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டிருப்பதனால் ஏற்படக் கூடியன.

தடு தண்டனையின் உட்கிடையைப் பின்வருமாறு கருதிக் கொள்ளவும் வாய்ப்புண்டு. பால்யக் குற்றவாளிகளை நன்னடத்தைப் பாடசாலைகளுக்கு அனுப்பி, மீண்டும் குற்றம் செய்யாதவாறு அறிவூட்டி மீண்டும் தண்டனை பெறுதல் என்பதிலிருந்து தடுத்துக்கொள்ளுதலும், மேலும் சமூக செயல்களுக்கான வழி காட்டுதல் என்ற வகையில் தடுதண்டனையை உளநோய் மருத்துவ முறை, சேரி ஒழிப்பு மூலமாக குற்றத்தடுப்புத் திட்டங்கள், இளைஞர் கழகங்களை அமைத்தல் போன்றதன் வழியாக குற்றமிழைக்கும் வாய்ப்பியைக் குறைத்து மறுவாக்கம் பெற வழி செய்தலும் இதன் அடங்கலாகின்றன.

தண்டனை முறையில் தண்டனை வரலாற்று முறையில் தடுதண்டனை முன்னேற்றகரமான அம்சங்களைக் கொண்டிருப்பினும் இதற்கெதிரான கண்டனங்களும் இருக்கவே செய்கின்றன. இக்கொள்கையானது பல விரும்பத்தகாத தன்மைகளுக்கு வழிகோலும் என்கின்றனர். தடுதண்டனையானது கடுமையான இழப்புக்களை ஆதரிக்கின்றதென்றும், கொலை குற்றம் செய்தவனை விசாரணை என்ற ரீதியில் பல காலத்திற்கு சிறையில் வைத்து தீர்ப்பினைக் காலம் தாழ்த்தி வழங்குவது, மரண தண்டனையை ஒத்திவைப்பது, சிறைத் தண்டனையை ஒத்திவைப்பது, சிறிய தண்டனைகளை வழங்கி மன்னிப்பது என்றவாறாக பலவித சலுகை நிலைகளை குற்றவாளிக்கு வழங்கி குற்றச் செயல் பெருகவும், இழப்புக்களை ஏற்படுத்தவும் வழி செய்கிறது என்று குற்றம் சாட்டப்படுகிறது.[18] உண்மைத் தண்டனைக்கும் தடுதண்டனைக்குமிடையிலான வேறுபாடுகள் இத்தண்டனை

முறையில் விளக்கப்படவில்லை. தடுக்கும் விளைவுகளை ஏற்படுத்துகிற போது குற்றமற்ற வர்கள் தண்டனை பெறுவதை இக்கொள்கை ஓரளவாயினும் நியாயப்படுத்துகிறது என எண்ண வாய்ப்புகள் உண்டு. சமூகத்திலும் இத்தண்டனை முறைமைகளில் உள்ள அக்கறைப்பாட்டினைக் குறைத்து, ஓர் தண்டனையின் இயலுமாறுகள் குறித்த உள்ளார்ந்த உணர்வுகளை இம்முறை புறக்கணித்து விடுகிறது.

குற்றத்தை மையமாகக் கொண்டே குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே அறநூல்களுக்கு உகந்த முறை. தடுதண்டனையின் பிரகாரம் குற்றம் சுமத்தப் பட்டவன் குற்றவாளி எனத் தீர்மானிக்கப் படின் அவன் எவ்வாறு நடாத்தப்பட வேண்டும் என்பவை பற்றிய முடிவுகள் எத்தகைய முறையில் நடாத்தப்படுவது பொருத்தமானது என்பது பற்றிய முடிவுகள் நீதிவான் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குற்றவாளி சமூக வாழ்விற்குள் திரும்பி வருவதற்கு எவ்வளவு காலம் வேண்டும், அவ்வளவு காலத்திலும் எத்தகையதொரு நிலையில் எங்கு குற்றவாளி வைக்கப்பட வேண்டும் என்பவை பற்றி தீர்மானங்களை எடுக்கின்ற பொறுப்பினை நீதிவான் அல்லது யூரிகள் சபையே முடிவு செய்யும். மேலும் நீதிவான் நீதி எனும் நிலை நின்று குற்றவியல் சட்டங்கள் தம்மிடையே கொண்டிருக்கும் இடைவெளிகள் (range) தனது மனச்சாட்சி ஆகியவற்றையும் உட்படுத்தியே மேற்படி விடயங்களை நீதிவான் முடிவு செய்வார். இங்கு மையப் பொருளாகக் குற்றவாளி இடம் பெறுவானே தவிர குற்றம் இடம்பெற வாய்ப் பில்லை. இங்கு தீர்ப்புக்கள் குற்றவாளியை மையப்படுத்தியதொன்றாக அமையுமே தவிர குற்றத்தை மையப்படுத்தியதாக அமைவதற்கு ஏது நிலையில்லை.

தண்டனை வரலாற்றில் நீண்ட வளர்ச்சி நிலையை சிந்தனை மாற்றங்களை உள்ளிட்டதொன்றாய் சீர்திருத்தத் தண்டனை முறைமை அமைகின்றது. வித்தியாசமான அணுகுமுறைகளைக் கொண்ட இத்தண்டனை முறைமை, குற்றவாளிகளைத் திருத்துவதற் காக, வளர்ச்சி பெற்ற உள மருத்துவ முறை களைப் பெரிதும் எதிர்பார்த்துள்ளதொன்றாய் விளங்குகிறது. இதன் வித்தியாசமான அணுகு முறைகளால் இதனை நீதிமன்றத் தீர்ப்பின் ஒரு பகுதியாகவே சிலர் கருதிக்கொள்ளவும் இம்முறைமை வாய்ப்பளிக்கிறது. 'துன்பப் படுவதால் நாம் கற்கிறோம்' என்பது ஒரு கிரேக்கத்து அனுபவக் கூற்றாகும். எப்படியோ எவ்வாறோ ஏதோ ஒருவகையில் உந்துணர் வொன்று தண்டனை பெற்றவனுக்கு "நீ குற்றம் செய்ததால் தண்டிக்கப்படுகிறாய் என்பதை உணர வைக்க வேண்டும்" அந்த வழியில் அதையுணர்ந்து மனதாரக் குற்றவாளி திருந்துகிற போதுதான் இந்த சீர்திருத்தம் என்கிற கருத்தாக்கம் அவனில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப் படுகின்றது. மேலும் மனிதர்கள் தண்டனை பெற்றதன் விளைவாகச் சிறைச்சாலைகளுக் குச் செல்கிறார்களே தவிர, அங்கு தண்டனை யைப் பெறுவதற்காகச் செல்லவில்லை என ஏ. சி. இவாங் குறிப்பிடுவதன் மூலமாகச் சிறைச்சாலைகள் வசதிகள், தூய்மைநிலைகள் வழங்கப்படுகின்ற பேணப்படுகின்றதொரு இடமாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திறந்த சிறைச்சாலைகள் அதற்குள் குற்றவாளிக்கு ஓரளவிற்காயினும் சௌகரியங் களையும், சுயாதீனக் கருத்து நிலைகளில் இயங்குவதற்கான தற்சுதந்திரத்தையும் வழங்கி கல்வியறிவு, அறவழிப்பட்ட அறிவு, தொழினுட்ப அறிவு போன்றவற்றினை வழங்கி அதன் வழி சிறைக்குப் பின் சீர்திருந்திய மனிதனாக சமூகத்தில் பிரவேசிக்க வழி செய்வது சிறந்த பலனை அளிக்கும் என இத்தண்டனை முறைமை நம்புகின்றது. ஆயினும் கள ஆய்வுகள் இவர்களது எதிர்பார்ப்புகளுக்கு எதிர்மாறான விளைவுகளையே சுட்டிக்காட்டு கின்றன. சிறை வாழ்வை முடித்து வரும் குற்றவாளிகள் இறுக்கமான மனநிலைகளுட னேயே வெளியில் வருகிறார்கள் என்றும்,

வேறு சிலர் இனிமேல் குற்றம் செய்த பின் காவலர்களிடம் இலகுவில் பிடிபட்டு விடக்கூடாது எனும் எச்சரிக்கை உணர்வு மிகுந்தவர்களாகவே வெளிவருகிறார்கள் எனவும் கள ஆய்வுகள் அறியப்படுத்துகின்றன.

இக்கொள்கை உயர்ந்த விழுமியங்களை உள்ளீடாய் உடையதொன்றாகக் காணப் படினும் நடைமுறையில் இதன் பிரயோகம் நிறைந்த பயனைத் தந்ததென்றில்லை. சிறைச்சாலைகளில் புனரமைப்புக்களையும், புதியன புகுத்துதலையும் விதந்துரைக்கும் இக்கொள்கையானது பல அவதூறுகளையும் சந்திக்க வேண்டிய நிலைப்பாட்டிலேயே யுள்ளது. சிறைச்சாலை வழங்கும் சேவைகளுள் முக்கியமானதொன்றாகக் கருதப்படுவது சிறைக்கைதி சிறையிலிருந்து மறுபடியும் சமூகத்திற்குத் திரும்பும் போது அவனைத் திருந்திய மனிதனாக உருவாக்கி உலகிற்களிக்க வேண்டும் எனும் கடைப்பாடு சிறைச்சாலைகளுக்குரியது என்பதாகும். நடைமுறையில் இவ்வெதிர்பார்ப்புக்கள் நிறைவேறியதா? "சிறைக்கூடம் சிறைக்கூடமே தான் கைதியானவன் அதில் தன்னைத் தொடர்ந்து ஸ்தாபித்துக் கொள்வதற்கு அதுவொரு மலர்ப்படுக்கையல்ல" என ஏ. சி. இவிங் கூறியிருந்தாலும்[19] சிறைச்சாலை யில் ஒருவனை நீண்ட காலத்திற்குத் தடுத்து வைக்கின்ற போது அவன் சிறை வாழ்வுக்கே பழக்கப்பட்டவனாகவும், சமூக வாழ்வில் இணைந்து கொள்வதில் போதிய பயிற்சியி னைப் பெறாதவனாகவும் மாறுகின்ற துரதிஷ்டம் இம்முறையில் இருக்கவே செய்கிறது. மேலும் சிறைச்சாலைகளை நவீனமயப் படுத்தல் வேண்டும் எனச் சீர்திருத்தக் கொள்கையில் குறிப்பிட்டிருப்பினும் மனிதர்கள் தண்டனை வழங்கப்பட்டதன் விளைவாகவே சிறைச்சாலைக்குள் செல்கிறார்களே தவிர, அங்கு மீண்டுமொரு தண்டனையை எதிர்பார்த்துச் செல்வதில்லை என ஏ. சி. இவிங் கூறியிருப்பினும்[20] சிறைச்சாலையின் வசதிகள், தூய்மை நிலைகள் வழங்கப்பட வேண்டும், பேணப்பட வேண்டும் என நீண்ட நாட்களாக பலதரப்பட்ட குரல்கள் பல்வேறு வகைப்பட்ட சித்தாந்தப் பின்னணிகளைக் கொண்டவர்களிடமிருந்து ஒலித்துக்கொண்டி ருக்கவும், இன்றும் கூட சிறைச்சாலைகள் காற்றோட்ட வசதிகளற்றவைகளாகவும், நன்றாகப் பராமரிக்கப்படாதவைகளாகவும் புராதன கோட்டைகளுக்குள்ளும், கொத்தளங் களுக்குள்ளும் அமைக்கப்பட்டிருப்பவை களாகவுமே காணப்படுகின்றன.

சீர்திருத்தக் கொள்கையின் பிரகாரம் 'கல்வி புகட்டுதல்' ஓர் தண்டனை முறையாகப் பயன்படுவதனைக் கல்விசார் நிபுணர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். கல்வியைப் பெறுதலென்பது ஓர் அடிப்படை மனித உரிமையாகக் கொள்ளப்படுகிறது. கல்வி கற்றலில் நாட்டமேயில்லாத ஒருவனுக்கு கல்வியறிவினைப் புகட்டுதல் என்பது அவனைப் பொறுத்த வரையில் தண்டனை யாக அமையலாமே தவிர கல்வி கற்பித்தல் என்பது ஓர் தண்டனையுமல்ல, தண்டனைக் கான முறையுமல்ல.

சீர்திருத்த தண்டனை முறைமைகளால் நடத்தைக் கோலங்களில் இலகுவில் மாற்றங் களை ஏற்படுத்த முடியாது. எடுத்துக்காட்டாக குற்றவாளியொருவனுக்கு கசையடித் தண்டனையை நீதிமன்றத்தில் அல்லது பொதுவிடத்தில் வைத்து வழங்குகின்றபோது அவன் மீண்டும் குற்றம் செய்வதிலிருந்து தடுக்கப்படுவானே தவிர சீர்திருத்தம் பெற்றுவிட்டான் எனக் கருதிவிட முடியாது. சீர்திருத்தம் என்பது மனமாற்றங்களை அடிப்படையாகக் கொண்டது. சீர்திருத்த முறைமைகளால் உண்மையில் குற்றவாளிகளி மிருந்து எதிர்பார்க்கப்படுவது அதனை நடைமுறைப்படுத்துவதற்கான கட்டாய ஒத்துழைப்பையல்ல மாறாக மனப்பூர்வமான பங்கெடுப்பினையே அதாவது பங்குபற்றுதலி னையேயாகும். எனவே சீர்திருத்தம் என்பதனைத் தண்டனை வழியால் பெறலாம் என்பது சந்தேகத்தக்குரியதொன்றே.

குற்றவாளிகளைத் திருத்துவதற்காகப்

பிரயோகிக்கப்படும் "ஆன்மாயக்காப்பு" அல்லது "உதவும்முறை" (Curative Method) என்பதனை சீர்திருத்தக் கொள்கையுடன் இணைத்துப் பார்க்கிறதொரு போக்கும் காணப்படுகிறது. எனினும் உதவும் முறையும், சீர்திருத்த முறையும் வெவ்வேறானவை. உதவும் முறையில் குற்றவாளிகள் கெட்டவர் களல்ல என்றும் அவர்கள் நோயாளிகள், அவர்களது சமூக விரோத நடத்தைகள் ஆளுமை குறித்த பிறழ்வு நிலைகளினால் (Disorder) அல்லது மனக்குழப்பங்களினால் வெளிப்படுபவை எனவும் கருதுகின்றன. இத்தகையவர்களுக்குத் தண்டனை வழங்குதல் மேலும் சீர்குலைந்த நிலைமைகளை, பாதக மான விளைவுகளை ஏற்படுத்தும், எனவே இவர்களைத் தண்டிப்பதை விட இவர்களுக்கு உதவுவதே உகந்தது என உதவும் முறை கொள்கையினர் குறிப்பிடுகின்றனர். உதவிக் கரங்களை குற்றவாளிகளை நோக்கி நீட்ட வேண்டும் எனக் குறிப்பிடும் உதவும் கொள்கை யினர் தண்டனை வழங்கும் முறைகளை முழுமையாக ஒழித்து, பதிலாக ஒழுங்கு படுத்தப்பட்ட அளவீடுகள் கொண்டதும் நன்கு வடிவமைக்கப்பட்டதுமான ஒன்றுக்கு மேற் பட்ட முறைகளை ஈடுபடுத்தி குற்றவாளிகள் மீட்சி பெற உதவ வேண்டும் எனக் கருதுகின்றனர்.[21]

ஆரம்பக் கட்டத்தில் இக்கொள்கை உற்சாகமூட்டுகிறதொன்றாகக் காணப்பட்டா லும் நடைமுறையில் மெய்யியல் முரண்பாடு களை உள்ளடக்கிதொன்றாகவே விளங்குகிறது. தண்டனை பற்றியதொரு தவறான எண்ணப் போக்கை உருவாக்க இக்கொள்கை வழியமைக்கிறது. குற்றவியல் என்பது கொலை, கற்பழிப்பிலிருந்து புகைத்தல், கடத்தல் வரை நீண்டு செல்கின்றது. இவை யாவற்றையும் உதவும் முறைக்குள் உட்படுத்தி விட முடியுமா? குற்றவாளியை நோயாளி எனக் கருதுதல் பொருந்துமா? நோய் என்றால் என்ன? ஒருவன் உடல் ரீதியாக, உளரீதியாகப் பாதிக்கப்படுகின்ற போது அவனை நோயாளி எனலாம். உதவும் கொள்கையினரின் பிரகாரம் வங்கிக் கொள்ளைக்காரனை நோயாளியாகக் கொள்ள வேண்டும். வங்கியில் கொள்ளையடி ப்பதை உடல் நோயின் அல்லது உளநோயின் வெளிப்பாடு எனலாமா? வேண்டுமாயின் வங்கியில் கொள்ளையடிப்பதற்கு சிறந்த உடல் வள வலிமை தேவையென்றே கூறலாம். கொள்ளையடிப்பவன் உருமம் குறித்த உடைமை குறித்த நாட்டுச் சட்டத்தினை மதிக்க மறுக்கிறான். இங்கு எதிர்ப்படுவது ஒரு ஒழுக்கப் பிரச்சினையே தவிர மருத்துவப் பிரச்சினையல்ல. எனவே உதவும் முறை சிறிதளவிலான குற்றங்களுக்கும் அதன் பரிகாரங்களுக்கும் உகந்ததாய் அமையுமே தவிர குற்றத்திற்குத் தகுந்ததொரு தண்டனை முறையாக அல்லது திருத்த முறையாக அமைய முடியாது.

குற்றத்திற்குத் தண்டனை வழங்குவதன் வழியாகக் குற்றச் செயலைத் தடுப்பதில் அறவியல் ரீதியாக வெற்றியடைந்து விட முடியுமா? அறவியலுக்கு ஆரம்பத்திலிருந்தே தண்டனை முறைமை உடன்பாடற்றதொன்றெ னினும், குறைந்த பட்சம் குற்றவியல் சட்டத் துறைக்காயினும் தண்டனை முறைமைகள் நேர்க்கணியமாக பெற்றுக்கொடுத்ததோ வெனின் அதற்கும் இன்றுவரை ஒருமுகப்பட்ட பதிலில்லை. தண்டனை வழங்குதல் 'திருப்திப்படுத்தும்' எனத் தண்டனை பற்றிய திருப்திப்பாட்டுக் கொள்ளை (Satisfaction Theory) குறிப்பிடுகிறது. இதன் பிரகாரம் குற்றவாளி தண்டிக்கப்படுகின்ற போது, குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவன் திருப்திப் படுகிறான், சௌகரியப்படுகிறான். அவனது குடும்பம், அவனைச் சார்ந்த நண்பர்கள், உறவினர்கள் திருப்தியடைகிறார்கள். எனவே தண்டனை முறை வரவேற்கத்தக்கதொன் றென திருப்திப்பாட்டுக் கொள்கையினர் கருதுகின்றனர். சட்டவியல் உணர்வோடு பாதிக்கப்பட்டவன் மனக்குறைகள் நீங்க இங்கு தண்டனை வழங்கப்படுகிறது. திருப்திப் படுத்தல் என்கிற கொள்கை வெறுமனே பாதிக்கப்பட்டவனைத் திருப்திப்படுத்துதல் என்கிற உணர்வினோடு மட்டுமல்லாமல்

குற்றத்திற்குச் சமனாகத் தண்டனை வழங்க வேண்டும் எனும் 'சமன் செய்கிற" உணர்வையும் உள்வாங்கியவாறே தனது கருத்தை உருவாக்குகிறது. எனவே பழிக்குப் பழி என்பது புதிய உருவில் தோற்றம் பெறுகிறது. முன்னோக்கிப் பார்த்தல் கொள்கையுடன் (Forward looking theory) திருப்திப்படுத்தும் கொள்கையை இணைத்துப் பார்க்கிற போது குற்றச் செயலால் பாதிக்கப்பட்டவன் குற்றவாளியைக் கூட்டில் நிறுத்த விரும்பாது மன்னித்து விட்டாலும் கூட சட்டம் முன்னோக்கிப் பார்க்கிற கொள்கையின் உந்துதலால் குற்றவாளியைக் கூண்டில் நிறுத்தித் தண்டிக்கவே செய்கிறது.

பாதிக்கப்பட்டவனை மையப்படுத்தி பாதித்தவனைத் தண்டிப்பதன் மூலம் (Victim Centerd theory of punishment) இழைத்த தீங்கிற்கு எதிர் மாற்றீடு பெற்று விடலாம் என்கிற கொள்கையும் இறுதியில் பெரிய பயன் எதனையும் தராததொன்றாகவே காணப்படுகின்றது. பாதிக்கப்பட்டவனின் உடல் இழப்புக்கள், உள இழப்புக்கள் தொடர்ந்தும் இழப்புக்களாகவே இருக்கும். ஈடுசெய்ய முடியாது. உடைமை இழப்புக்களை ஓரளவு ஈடுசெய்யலாமாயினும், சட்டவியல், குற்றவியல் முறைமைகளின் நீண்ட செயன் முறைகளினால் நிறைந்த சிரமம், நிறைந்த செலவு போன்றவற்றிக்குப் பின்னரே இது சாத்தியமாகும்.

குற்றவாளியைத் திருத்துவதற்கு தண்டனையைவிடத் தகுந்த பிற மார்க்கமுண்டாவெனின் பதில் காணல் சிரமமானதே. எனினும் குற்றம் செய்தவனைக் கழிவிரக்கத்துக்குள்ளாதல் மூலம் (Remorse) அறவியலுக்கும், சமூகவியலுக்கும், உளவியலுக்கும் உவப்பானதொரு வழிமுறையைக் கண்டு கொள்ளலாம். "கழிவிரக்கத்துக்குள்ளாதல்" என்ற அர்த்தத்தினைக் கொண்டுள்ள Remorse எனும் சொல் மிகவும் பரந்த அடிப்படையில் அறிவுலகில் உபயோகப்படுத்தப் படுகின்றது. பல வகைப்பட்ட வித்தியாசமான மனவெழுச்சி, குணவியல்புகளுக்குப் பதிலீடாகப் பயன்படுத்தப்படுகிறது.[22] நான் செய்தவற்றிக்காக என்னையே வெறுக்கும் ஒருவித மனப்பாங்கை உருவாக்கிக் கொள்வதையே கழிவிரக்கம் எனும் சொல் அறவியலில் சுட்டி நிற்கிறது. செய்யப்பட்ட தவறுக்காக பெரிதுமாய் வருந்துதல் இங்கு இடம்பெறும். கழிவிரக்கத்துக்குள்ளாதலை ஒருவகைத்தான தண்டனை முறைமை என பொதுவாக மக்கள் கருதினாலும், கழிவிரக்கத்துக்குள்ளாதலை தண்டனை வகைகளுள் ஒன்றாகக் கருத முடியாது.[23] ஆயினும் தண்டனையோடு பொதுவான ஒற்றுமைப் பாட்டினையுடையதெனலாம். இங்கு கழிவிரக்கம் என்பது அகச்சார்பானதாக இருக்கையில் தண்டனையானது அதன் பெரும் பகுதி பிறர் சார்ந்ததாகவே விளங்குகிறது. கழிவிரக்கத்துக்குள்ளாதல் அல்லது உள்ளாக்கப்படுதல் போதுமானதாக இருக்கலாம் அல்லது போதாததாக இருக்கலாம். கழிவிரக்கப்படுதல் குறித்த சிலர் கூடிய சிரத்தை கொள்ளலாம்., சிலர் அவ்வாறு கொள்ளாதும் விடலாம். எப்படியாயினும் கழிவிரக்கப்படுதல் என்பது ஒருவகைப் புரிந்து கொள்ளல் அல்லது விளங்கிக் கொள்ளல் என்பதனால் இது உளநைவினை ஏற்படுத்தும். உளநைவு மனிதாயப் பார்வை உருவாக தகுந்த காலாயமையும். மனிதாய மலர்வில் குற்றங்கள் குறையும். சுபீட்ச வாழ்வை உறுதிப்படுத்த மையவிசையாக மேற்கில் சுவிஷேஷ மார்க்கங்கள் எதிர்பார்ப்பதும் கிழக்கில் வள்ளுவம் போன்றவை எதிர்பார்ப்பதும் 'நாண நன்னயம்' செய்யும் உளநைவினையே.

## அடிக்குறிப்புகள்


1. Hansvon Henting, (1937) ***Punishment,*** London William Hodledge and Company Ltd, P. 119
2. ***Ibid***, p. 119
3. திருவள்ளுவர், ***திருக்குறள்,*** அதிகாரம் இன்னா செய்யாமை, குறள் 314
4. Raziel Abelson, (1982) ***Ethics for Modern Life,*** New York St. Martin's Press, P. 189
5. ***Op.cit.,*** Hansvon Hentig P.3
6. Ross. W.D., (1930) ***The right and the good,*** London: Oxford at the Clarendan Press P.56
7. Moore. G.E., (1959) ***Principia Ethica,*** London: Cambridge University Press, P. 214
8. ***Op.cit.,*** Raziel Abelson P. 191-192
9. ***Ibid*** P. 193
10. Parkinson. G.H.R., (1988) ***An Encyclopedia of Philosophy,*** Routledge pp. 763 - 764
11. ***Op.cit.,*** Raziel Abelson P. 191
12. ***Ibid***. P. 190
13. முத்துரங்க செட்டியார் நா., (1929) ***மநுதர்மசாத்திரம்*** (தமிழாக்கம்), சென்னை : ஸ்ரீ பார்வதி அச்சகம் ப. 225
14. மே. கு. நூ. ப. 211
15. ***Op.cit.,*** Hansvon Hentig, P. 17-35
16. Richard B. Brandt, (1959) ***Ethical Theory,*** Prentice Hall Inc. P. 503
17. ***Op.cit.*** Raziel Abelson , P. 211
18. ***Ibid***. P. 192
19. Ewing A. C., (1990) ***The Morality of The Punishment,*** London: Kegan paul, P.152
20. ***Ibid.*** P. 152
21. John Cottingham, (1988) ***Philosophy of Punishment, An Encyclopedia of Philosophy,*** Routeledge , P. 775
22. ***Op.cit.,*** Richard B Brandt , P. 525
23. Jenny Teichman, (Oct. 1973) "Punnishment and Remorse", ***The journal of the Royal institute of Philosophy*** ,P. 344